"விடுதலை"
(சந்தா விவரம்)

[முன் பணமாக]

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்று மாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0

குறிப்பு:- சந்தா எண் ணைத் தெளிவாகக் குறித்து அனுப்பும், தபால்களும், M.O. க ளும் உடனுக்குடன் வெளியி டப்படும்.

டெலிஃபோன் : 85977
பத்வு எண் : 4739

"தினந்தோறும் வெளிவரும் ஒரே தமிழ் நாளேடு"

திராவிட நாடு திராவிடருக்கே!

விடுதலை

தினசரி

"VIDUTHALAI"
(Leading Tamil Daily)

1937-ல் துவங்கப்பட்டது.
Estd. July 1937

108

போபால் காங்கிரசு

சட்டசபைக்கட்சி கலைகிறது

போபால், பிப். 27—

போபால் காங்கிரசு சட்டசபைக் காங்கிரசுகமிட்டியிலிருந்து போபால் முன்னாள் நிதியமைச்சர் திரு கே டாபிரசாத்தும் மற்றும் 9 பேர்க ளும் தங்கள் அங்கத்தினர் பதவி னை ராஜினாமா செய்துவிட்ட னர். இவர்களது ராஜினாமா கடி தங்கள் பண்டித நேருவுக்கு அனுப் பப்பட்டிருப்பதாக தெரிகிறது. அகில இந்திய காங்கிரசு கமிட் டியின்போக்கைக் கண்டித்து இவர் கள் காங்கிரசைவிட்டு வெளியேறு வதாகக் கூறினர்.

தொகுதி 15 | சென்னை : விஜய ஞ மாசி மீ 16 உ (27—2—54) சனி ★ வெளியூர் : விஜய ஞ மாசி மீ 17 உ (28—2—54) ஞாயிறு | இதழ் 266

★ சென்னை சர்க்காரின் பற்றாக்குறை 'பட்ஜட்' ★

புதிய வரிகள் மூலம் ரூ. 40 லட்சம் ஈடு செய்யப்படுமாம்

11 கோடி ரூபாய் கடனும் வாங்கப்போகிறார்களாம்

சென்னை, பிப். 27—

சென்னைசர்க்காரின் 1954-55-ம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டம் மேற்றைமசட்ட சபைக்கூட்டத்தில் நிதிமந்திரி திரு. சி. சுப்ரமணியம் அவர்களால் தாக்கல்செய்யப்பட்டு விளக்கப்பட்டது. இந்த 'பட்ஜட்டின் ரூ. 58,00,000 அண்டி விழுந்தது. இதில் ரூ. 40 லட்சம் புதுவரிகளின் மூலம் ஈடு செய்யப்படும் என மந்திரியார் அறிவித்தார். உத்தேசிக்கப் பட்டுள்ள புதுவரிகள்:

ரூ. 500 ம அதற்கு மேலும் நிலவரிசெலுத்தும் நிலச்சு வான்தார்களுக்கு 'சர்சார்ஜ்' வரி.

தேயிலை, காஃபி, ரப்பர் எஸ்டேட்போன்றவைகள்பயி ரிடும் தோட்டங்களுக்கு விவ சாயவருமான வரி.

1947 ஜனவரி 1-ந்தேதிக்குப் பின் சர்க்காரின் நீர்ப்பாசன திட்டத்தின் வினைவாக நன் மையடைந்து வரும் நிலச்சு வான்தார்களுக்கு 'அபிவி ருத்தி' நிட்ட வரி.

கோரட் கட்டணம் உயர்வு.

தங்கம், வெள்ளி கற்கள் (நிகப்பு புஷ்பராகம்) முதலிய வைகளுக்கு விற்பனை வரி அதிகரிப்பு.

மில் துணிகளுக்கு (16-ம் நம் பருக்கு குறைந்த மட்ட ரகம் நீங்கலாக) ரூபாய்க்கு 0-1-3 வீதம் வரி அதிகரிப்பு.

(ஏற்கனவே மில் துணிக்கு ரூபாய்க்கு 9 பை வீதம் லீற் பனைவரி விதிக்கப்படுகிறது. இப்போது அதிகப்படியாக விதிக்கப்படியிருக்கும் விற் பனை வரியையும் சேர்த்தால் ரூபாய்க்கு 2 அணா வீதம் விற்பனை வரி வசூலிக்கப் படும். தவிரமத்திய அரசாங்கம் மில் துணிகளுக்கு ரூபாய்க்கு காலணா வீதம் "செஸ்"வரி போட்டிருக்கிறது. இது கைத் தறி நெசவாளருக்கு உதவு வதற்காக விதிக்கப்படுகிறது, இதையும் சேர்த்தால் இனி மேல் மில் துணிக்கு ரூபாய்க்கு ரூ 0-2-3 வரி செலுத்தவேண் டும்)

கீழ்க்கண்ட இனங்கள் மீது விற்பனைவரி குறைக்கப்படும்.

மீன், காய்கறி,பழம்,முட்டை இறைச்சி ஆகியவைகளுக்கு விற்பனைவரி விடைமாது. (ஆனால் அரிசி, பால் முதலிய வைகளுக்கு இருந்துவரும் விற் பனைவரியில் மாற்றமில்லை)

கைத்தறி துணிகள் மீதுள்ள விற்பனைவரி ரத்து செய்யப் படும்.

புதுவரிகள் போடுவதுடன் மேலும் தண்டி விழும்தொகை ரூ. 18 லட்சம்:

மூல தனச்செலவுகளுக்காக இவ்வாண்டு மத்திய சர்க்கா ரிடமிருந்தும் பொது மக்களிட மிருந்தும் சென்னை சர்க்கார் 11 கோடி ரூபாய் கடன்வாங்க இருக்கின்றனர்.

சிரிய பரட்சி :

சபாநாயகரே ஜனாதிபதியானார்

ஷிஷாக்லி நாட்டைவிட்டு வெளியேறினார்

.....

பெய்ரூத், பிப். 27—

ராணுவத்தில் ஏற்பட்ட இடர் புரட்சிகாரணமாய் சிரியாத்தலைவ ர் ஷிஷாக்லி ஜெர்க்கிக்காரருக் குப் பணிவேண்டியதாயிற்று. தனது ஜனாதிபதிபதவியை ராஜி னாமா செய்துவிட்டு மேற்படி லெபனானுக்கு சென்றுவிட்டதாக செய்தி கிடைத்துள்ளது.

அவரை 24 மணியில் வெளி யேறச் சொல்லி இளர்க்கிக்காரர் கள் எச்சரிக்கை விடுத்திருந்த னர்.

சிரிய பார்லிமெண்டில் நேற்று சபாநாயகர் டாக்டர் காஸ்ஸாரி புதிய ஜனாதிபதி தேர்ந் தெடுக்கப்படும் வரை அரசியல் சட்டப்படி தாமே ஜனா திபதி பதவியை மேற்றிருப்ப தாக அறிவித்தார். அவர் ஒப்பி போன தலைவர் விடுத்த செய்தி யையும் படித்துக் காட்டினார்.

அச்செய்தியில் ஷிஷாக்லிறி பிப்பிட்டிருப்பதாவது: "இப்புரட்சி யை நான் நிறுத்த தேரத்திலேயே அடக்கியிருப்பேன் ரத்தக்களரி வேண்டா மென்பதற்காகவே நான் தலைமைப் பதவியைத் துறந்து வெளிநாடு போகிறேன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

தி. கொ- தேர்தல் முடிவுற்றது

இன்று வாக்குள் எண்ணிக்கை

.....

திருவனந்தபுரம் பிப் 27—

நேற்றுடன் இரண்டு தேர்தல் சம்பந்தான வாக்களிப்பு முடிவுற் றது இன்று முதல் வாக்குகள் எண்ணிக்கப்படும்.

மாலைமுரசு அறிவிக்க மேற்படு

இரண்டு தேர்தலின் வாக்குள் எண்ணிக்கை இன்று மாலை 5 மார்ச்சு 3 ம் தேதிவரை நடை பெறும் எண்ணிக்கையின் முடிவு கள் அதில் இன்று வரையில் மூலம் காலை 8-15 மாலை 6-10 வரை 8-30க்கும் வானொலிமூலமும் சமயங்களிலும் மேற்கண்ட தேதி களில் பிரதி இனமும் அறிவிக்கப் படும் என்று தெரிகிறது.

வரவு—செலவு திட்டத்தை மந்திரிமார்வாசித்தபின்மார்ச் 1ந்தேதி 11 மணிவரை சபை ஒத்திவைக்கப்பட்டதாக சபா காரியர் அறிவித்தார்.

மேல் சபையில்

நேற்றுபிற்பல் சென்னை மேல் சபையின் முதலமைச்சர் திரு. ராஜாகோபாலாச்சாரி மார் அவர்கள் 1944-55-ம் ஆண்டின் வரவு செலவு திட் டத்தைக் கொண்டுவந்தவிளக் கினார்.

சென்னை சர்க்கார் வரவு-செலவு திட்டம்

—x—

பொதுக் கண்ணோட்டம்

(நூபாய் லட்சக்கணக்கில்)

1954-55 வருமானம் ரூ44,54

புதிய வரிகள் மூலம் ரூ. 40

மொத்தம் வரவு ரூ. 44,99
மொத்த செலவு ரூ. 45,17

துண்டு விழுவது ரூ. 18

★★★★★★★★★★

80 வே போக்குவரத்துத் தொழிலாளர் 'ஸ்டிரைக்'!

கராச்சியில் நெருக்கடி

கராச்சி, பிப் 26—

கராச்சி வண்டி வாகனத் தொழி லாளர் சங்கபிரதமரிடம் அளித்த கோரிக்கைளை ஏற்றுக்கொள்ள ளத செல்வந்தர்கள் 8000 க்கு மேற் யக்க போக்கு வரத்துத் தொழி லாளர்கள் மேற்று வேலை வேலை நிறுத்தம் செய்தனர் சமான் போக்குவரத்து தடைப்படுவில் டது 1200 ஒட்டக வண்டிகள் 2000 எருதுவண்டிகள் 300 மோட்டார் டிரக்குகள் தேக்கப்பட் டுள்ளன.

★★★★★★★★★★

காங்கிரசாரின் 'ஹரிஜன சேவா'வின் லட்சணம்!

தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லத்திலிருந்து வெளியேற்றம்

அசெம்பிளியில் கேள்வி

சென்னை, பிப். 27—

நியாகராஜ நகரிலுள்ள தக் கர் பாபா வித்தியாலயத்தி லிருந்து சில தாழ்த்தப்பட்ட அனதைமாணவர்கள் வெளி மேற்றப்பட்டது பற்றி சட்ட சபையில் கேள்வி கேட்கப்பட் டதற்கு தாழ்த்தப்பட்டோர் நல இலாகாமந்திரி திரு பழனி சாமி கவுண்டர் இதைபற்றித் தனக்குத் தகவல் கிடைத்தி ருப்பதாகவும் விரட்டப்பட்டவர் எத்தனை பேர்எதற்காகவிரட் டப்பட்டனர் என்பதைபற்றிய விவரம்கிடைக்கவில்லைஎனக் கூறினார்- மாணவர்கள் பட்டினி கிடப்பதைத் தடுக்க வேண்டியவற்றை செய்வதாக வும் குறிப்பிட்டார்.

தக்கர்பாபா வித்திமாலயத் திலிருந்து சுமார் 144 மாணவர் கள் (தாழ்த்தப்பட்டவர்கள்) வெளியேற்றப் பட்டிருப்பதாக தெரிகிறது,

ஏழைகளுக்கு உணவும் முக் காலைத் தரப்படும் உடை யும் தருமாறு கேட்ப டுதற்கு வெளிமனுப்பப்பட்ட னராம்.

இவர்கள் சென்ற 24ம்தேதி முதல் பட்டினியாய் தவிக்கின் றனர். இவர்கள் சட்டசபை மெம்பர்களை மணிக்குறை களைத் தெரிவித்த் கொண் டனர். சில சட்டசபை மெம் பர்கள் இவர்களுக்கு உணவு உதவி புரிந்துள்ளனர்.

எம். ஆர். ராதா நாடகத்துக்குத் தடை

சென்னை, பிப். 27—

தோழர் எம். ஆர். ராதா நடத்திவரும் "ஆயுள் தண் டனை" என்ற நாடகத்தைக் தடைசெய்து சென்னை சர்க் கார் உத்திரவு பிறப்பித்துள் ளனர்.

இந்தோ-சீனா பிரச்னை

மேற்கத்தியர் கருத்து

பி.முயார்க், பிப். 25—

இந்தோ சீனாவில் போர்கிறுத் தம் எற்படுவது விரும்பத்தக்க தென்று அய். நா. பேரதுகேயை வாளர் ஹாமர் ஜர்கிட் கருது நோர்.

டல்லஸ் நம்புநோர்

சென்னை இந்தோ சீனாவில் அமைதி ஏற்படவே ஜினிவா மாநாட் டில் ஏதாவது பலன் ஏற்படுமென் றும் தான் கம்புவதாக அமெரிக்க அயல்காட்டுமந்திரி டல்லஸ் அமெரிக்க காங்கிரஸ் [சட்டசபை] கமி ட்டியில் நேற்று தெரிவித்தார்.

ஆச்சாரியார் கல்வித் திட்டத்திற்கு மலையாள ஆசிரியர்கள் எதிர்ப்பு

மந்திரியாரிடம் முறையிட்டு

சென்னை, பிப். 27—

மலபார் உதவி பெறும் ஆரம்ப பள்ளிகளைச் சேர்ந்த 29 ஆரம்ப ஆசிரியர்களின் கூட்டம் ஒன்று நேற்றுசென் னைக்கு ரயில் மூலம் வந்திறங் கினது!

இவர்கள் புதிதக் கல்வித் திட்டம் பற்றி தங்கள்குறைகளை சர்க்காருக்கு நேரில் தெரிவிக் கவே வந்துள்ளனர். ஆசிரியர் களுக்கு அளிக்கப்படும் சம்ப ளகுலுறவைப்பற்றியும் எடு த்துக கூறவும் வந்துள்ளனர் இவர்கள் கோரிக்கோட்டி லிருந்து வருகின்றனர்.

இக்கூட்டத்தின் தலைவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது: பருளைக்கர் கமிட்டி போர் சை அமுல் படுத்துவதாலின் 1000க் சனக்கான ஆசிரியர் கள் வேலைபிழக்கநேரிடு ஆசிரியர்களுக்கு வேலை போகுமாபின் புதிதக்கல்வித் திட்டத்தைப் புகுத்துவதை கிறுத்தவேண்டும். ஆசிரியர் களின் அடிப்படை சம்பளத் தை ரு 27 லிருந்து ரு 50 ஆக வேண்டும்.

சர்க்கார் ஆசிரியர்களுக்கு ஜோனாவிலிருந்தே நேரிடை யாக சம்பளம் பெறவழிசெய் ததை வரவேற்கிறோம்.

இக்கமிட்டியார் சட்டசபை தொடங்கு நிறது நேரத்துக்கு முன் னரேவலமாக வந்து சட்ட சபை முன் கூடினர்.

சட்டசபை மெம்பர் திரு. டி. எஸ். நாராயணன் கம்பி யார் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தலைவர் திரு. ஜி. நாரா உதவித் தலைவர் திரு. வி. குமாரமேனன் முதலமைச் சர் திரு. ராஜாகோபாலாச்சாரி யாரையும் சட்டமந்திரி திரு குட்டிகிருஷ்ணன் நாயரையும் கண்டு மகஜரை சமர்ப்பித்த னர்.

மலபாரில் புதிதக் கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவ தில் தங்களுக்குள்ள கஷ்டங்க ளைக் குறித்து சர்க்காருக்கு எடுத்துக் காட்டியும் அவற் றிற்கு மாதொரு பரிகாரமும் செய்யப்படவில்லை.

பருளைக்கர் கமிட்டியார் சிபார்சு செய்துள்ளபடி புதி மக் கல்வித் திட்டத்தை அமல் படுத்தக் கல்வியிலாகாஉத்திர வுப் பிறப்பித்துள்ளது. இன்ன படி ஆசிரியர்கள் பலர் தே மிழக்க நேரிடும் என நாம் றோம்.

1951-ல் சாரசரி ருக்கு 20 பிள்ளைக ருப்பது இனி சரச பருக்கு 30, 40, 50 எ வில் பிள்ளைகள் உ பட வேண்டும்.

இந்தச் சட்டம் அமல் படுத் தப்பட்டால் தற்சமயம் உள்ள 51 சதவிதம் பேர் ஆசிரியர் கள்வேலைபிழக்கவேண்டியது உறுதினளத்துக் கூறினர்.

ஜில்லாபோர்டுகளின் எதிர்காலம்

ஆராய கமிட்டி நியமனம்

மேல்சபையில் அறிவிப்பு

சென்னை, பிப். 27—

"சர்க்கார் ஜில்லாபோர் தேர்தல்களை ஜூலை கள்ளாவே நடத்தி வி விரும் பு கின்றனர். ஜில்லா போர்டுகளின் எதி காலம் பற்றி ராய்வதற்கு கமிட்டியையும் அமைக்க சர் கார் விரும்புகின்றனர். இக்க கமிட்டியார் எதிர்கால ஜில்லா போர்டுகள் பற்றியும், பஞ் மத்து போர்டுகள் பற்றிய மதிப்பிடுவார்கள்" என மேல்சபையில் வர் ரது பிரசங்கம் பற்றி கல பெற்ற விவரத்தைக்குப் லிக்கையில் விவசாய அமை சர் திரு. எம். பக்தவத்சல குறிப்பிட்டார். மேலும் "ச சபை நடைபெறுகையில் க காரின் புதிதக்கொள்கை பற்றி சட்டசபையில் அறி படும்" என்று கூறினார்.

இலங்கையில் தனித்தொகுதி முறையால் விளையும் தீங்கு

இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு கண்டனம்

கோழிக்கோடு, பிப் 27—

இலங்கை இந்திய காங்கிரஸ் முனைவர் தலைவருந் தூது சோஷ்டி மெம்பருமான திரு அப் துல் தஜீஸ் மேற்று இலங்கை சிலவகாரசாலை மாணவர் கூட் டத்தில் பேசுகையில் "இந்தியா இலங்கை கம்புவதாக மிக மோசமா னது நேருக்கடி மிகவும் இதனால் உண்டாயினும் நாம் இதற்கஞ்சி விடுவோம்' என்றார். அவர் மேலும் கு றி ப்பிட்டதாவது:— கடந்த ஆண்டுளில் உறிமைமனு களில் பிரதா உரிமை மனுக்க ளில் 6 சதவிதத்தான் வைல் செய்யப்படுகின்றது மீதமுள்ள 94 சத விதமுள்ள மனுக்கள் இருவருஷ்க்களில் பைல்செய்ய முடியுமா என்பதுவிளங்கவில்லை

தனித் தொகுதி முறை தேடுதி

எல்லா பிரஜைகளுக்கும் வோட் டுரிமையும் பார்லிமெண்டில் பிர தி நிதித்துவமும் நாப்படும் என்ற நாட்டின்தான் தனித் தொகுதி முறை பற்றி பரிசிலிக்க பிரதம மேநரியிடம் கங்கள் ஒப்புதல்தெரி வித்தோம் இது பினனல் நிர்க் கப்பட வேண்டியதென்றும் பதிவு செய்யப்பட்டவர்களு மட்டுமே அந்த உரிமை அளிக்கப்படுமென் றும் கூறப்படுகிறது.

தனித் தொகுதி முறையால் இலங்கை இந்தியர் இண்டை தவர் போல் ஒதுக்கப்படும் நிலை ஏற் படுவிடும் இந்த தனித்தொகுதி முறை எல்லா விருப்பத்துக்கு மாறாக திணிக்கப்படுகிறது.

இலங்கையில் கள்ளக் குடியேற் றம் எற்படாமல் தடுப்பதை நாம் ஆதரிக்கிறோம் ஆனால் வசமல்லாத சம்பந்தமாக சட்ட ரீதியான ருகவிடும் பொறுப்பை எதிர்களுக்கு விடு ருப்பது இந்தியருக்குப் வாதமான ஷாத்தாகும் என்றும் கூறி னர்.

இலங்கை இந்தியரில் ஒரு லெரக்கு மட்டும் பிரதிநிதித் துவ உரிமையளித்து 10 லட்சம்

பேரில் 7½லட்சம் பேரை அ தைளாக வீடப்பட்டிருப் பெருத்த அதிர்ச்சி என்றார்.